Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள் 04    விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    PEOPLES DAILY

நாதம் 01    மார்கழி    (21 - 12 - 1990)    வெள்ளிக்கிழமை    ஓசை 296

## செயற்பாடு தாமதத்தால் நடவடிக்கை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் யாழ். செயலக அதிகாரிகளிடம் சமர்பிக்காததினால் காணாமல் போனவர்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (க)

# கப்பலில் பொருள்கள் இறக்கிய மக்கள்மீது குண்டு வீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் அரசு அனுப்பிய கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த மக்கள்மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் என்னுமிடத்தில் கப்பலில்இருந்து பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் விமானத் தாக்குதலை மேற்கொண்டன. இந்த தாக்குதலில் இப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று சேதமடைந்தது.

இங்கு நின்ற பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்சென்று விட்டதால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப் பட்டுள்ளன. (மு)

## ஆட்சியின் பலன் முச்சக்கர வண்டி

(கொழும்பு)

தமது ஆட்சியின் இரண்டாவது ஆண்டுநிறைவு தினத்தை ஒட்டி நடைபெறும் கொண்டாட்டங்களில் கடந்தகால யுத்தத்தால் ஊனமாக்கப் பட்ட இராணுவச்சிப்பாய்கள், அதிகாரிகளுக்கு ஜனாதிபதி நேற்று முச்சக்கர நாற்காலிகள் வழங்கினார்.

இதேபோல யுத்தத்தால் ஊனமாக்கப்பட்ட மூவாயிரம் பேருக்கு ஜனாதிபதி தமது

(4 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறை துறைமுகத்தில்

## பொருள்கள் இறக்குவதற்கு இதுவரை அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசியப் பொருள்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குவது தொடர்பாக யாழ். அரச அதிபரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும் கூட்டுப் படை தலைமையகம் இது பற்றி எந்த முடிவையும் இது வரை வெளியிடவில்லை.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் செல்லும் லொறிகள் விபரங்களை அனுப்ப கோரிக்கை

(தெல்லிப்பளை)

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்படும் பொருள்களைக் காங்கேசன் துறைத் துறைமுகத்தில் வைத்து இறக்கி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அங்கிருந்து நேரடியாக எடுத்துச் செல்லும் நோக்குடன் ப.நோ. கூ. சங்கங்களின் லொறிகளின் இலக்கம், சாரதி, கிளீனர் ஆகி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை அரசியல்மயப்படுத்துவதில் கப். சுந்தரி தீவிர பங்கு கொண்டார்


### விடுதலைப்புலிகள் தலைமைச் செயலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் மத்தியில் சமூக பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டதோடு மக்களை அரசியல் மயப்படுத்தும் கட்சிச் செயற்பாடுகளில் கப்டன் சுந்தரி தீவிரபங்கு கொண்டிருந்தார்.

நேற்று முன்தினம் கட்டுவன் பகுதியில் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் துணைச் செயலாளர் கப்டன் சுந்தரிக்கும், அவருடன் வீரமரணமடைந்த ஏழு பெண் போராளிகளுக்கும் வீர வணக்கம் செலுத்தி விடுதலைப் புலிகள் தலைமைச் செயலகம் வெளியிட்ட அறிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் சுந்தரி

## இரு புதிய ஜெனரேற்றர்கள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ். வைத்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள்களின் விலையில் மாற்றம்

(தெல்லிப்பளை)

உலர் உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையும் விலைமாற்றத்தையும் கருத்திற்கொண்டு அத்தியாவசியமான உணவுப் பொருள்களின் விலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் படி 1 கிலோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம்

## இராணுவ நடவடிக்கையால் 250 பேர் அங்கவீனம்

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத் தாக்குதல்களால் யாழ். மாவட்டத்தில் மட்டும் சுமார் 250இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் அங்கவீனர்களாகியுள்ளனர்.

இவ்வாறு சுயாதீனமாக மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபர அறிக்கை ஒன்று தெரிவிக்கின்ற போதிலும் இத்தொகையிலும் அதிகமாக இருக்கக்கூடும் என்று மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## நாளை மாங்குள விபரங்கள்

(தமது நிருபர்)

நாளைய ஈழநாதத்தில் மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகளின் பெயர் விபரங்களும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரமும் வெளிவருகிறது.

(4 ஆம்பக்கம் பார்க்க)

திருமலை நகரில் இராணுவத்தால்

## ஆண், பெண், குழந்தைகள் உட்பட 5 தமிழர் கொலை

(திருக்கோணமலை)

சிறிலங்கா இராணுவத்தினர் திருக்கோணமலை நகர்ப் பகுதியில் ஐந்து தமிழர்களை வெட்டிக் கொலை செய்து ரயர் போட்டு எரித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: கடந்த செவ்வாய்க்கிழமை திருக்கோணமலை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள சமாதி பிள்ளையார் கோயிலடி என்னுமிடத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு அரசாங்க

## ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு 10 ஆயிரம் விசேட கொடுப்பனவு

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களுக்கு விசேட கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபா வழங்கப் படுமென சுகாதார அமைச்சு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் ஷெல் தாக்கு; புலிகள் பதில் தாக்குதல்

(ஆனையிறவு)

சிறிலங்கா இராணுவத்தினர் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை 4மணி தொடக்கம் இயக்கச்சிப்பகுதி குடிமனைகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்த தாக்குதலால் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முறையீடு செய்யவும்

தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றிய ஆசிரியர்களின் நேர்முகப் பரீட்சைக் கடிதம் கிடைக்காதவர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு தமது அனைத்து விபரங்களுடனும் மேன்முறையீட்டு கடிதத்தினை அனுப்பும்படி யாழ்ப்பாண தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் தோ மாலா கேட்டுக் கொண்டுள்ளார். (லோ)

## இறந்த அதிகாரிகளுக்கு வேறுபாடின்றி அஞ்சலி

(கொழும்பு)

நேற்று முன்தினம் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மரணமடைந்த திருக்கோணமலை மாவட்ட இராணுவத் தளபதியினதும் பொலிஸ் அத்தியட்சகரினதும் மரணச் சடங்கிற்கு ஜனாதிபதி பிரேமதாசா, திருமதி பிரேமதாசா எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் உட்பட முப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் உயர் இராணுவ, கடற்படை, விமானப் படைத் தளபதிகள் சென்று உயிரிழந்தவர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்த பேழைகளுக்கு மரியாதை செலுத்தினர்.

## 'சல்பீனியா' நீர்த்தாவரம் முற்றாக அகற்ற நடவடிக்கை

யானைக்கால் நோய் பரவுவதற்கு உதவும் 'சல்பீனியா' என்ற நீர்த்தாவரத்தை யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து முற்றாக அகற்றுவதற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்:- எமது ஸ்தாபனம் இல. 44, 46, கஸ்தூரியார் வீதியில்மீண்டும் 1-12-90முதல் இயங்கி வருகின்றது தவிர, இல.12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையிலும் தொடர்ந்தும் இயங்கிவரும் என்பதையும் எமது வாடிக்கையாளருக்கும், சகல மணிக்கூடு பாவனையாளருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் (50 வருடகால நம்பிக்கைச்சின்னம் ரதிவோச் வேக்ஸ்) - நிர்வாகம்.

(B-1648)

### யாழ்ஸ் றெஸ்ரோறன்ற்

வாடிக்கையாளர்களே! முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (ஆரியகுளம்) எனும் முகவரியில் இயங்கிவந்த எமது றெஸ்ற்ரோறன்ற் தற்போது இல.59, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம். (200 யார் தூரத்தில்)


(B- 1742)

### தேவை

வெற்று வெள்ளை முழுப் போத்தல், சீமெந்து பாக், கோழித்தீன் பாக் தேவை. மில்க்வைற்- யாழ்ப்பாணம்.

(B-1938)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| வீர ஜனனம் | வீர மரணம் |
|---|---|
| 22 – 06 – 1972 | 24 – 12 – 1988 |

### அ. நிக்சன்போல் (கூர்க்காஸ்)

''தமிழீழப் போரில் தன்னைத் தந்து தரணிக்கு நீயோர் தாரகை ஆனாய்''

இவரின் ஆத்மசாந்திக்காக 22-12-90 சனிக்கிழமை காலை ஆறுமணியளவில் புனித பத்திமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்க இருப்பதால் உறவினர்கள் அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உருத்திரபுரம், 8ஆம் வாய்க்கால்.

தகப்பன், தாய், சகோதரர்கள், சகோதரி;

(R-928)

## பட்டப்படிப்புகள் கல்லூரி

யாழ்ப்பாணம்

### அறிவித்தல்

அண்மையில் வெளிவந்த பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணிப் பரீட்சையில் சித்தியடைந்த எமது கல்லூரி மாணவர்கள் அனைவரும் 23. 12. 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு தவறாது கல்லூரியில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இயக்குநர்,

பட்டப்படிப்புகள் கல்லூரி

57\48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(B. 1748)

## வெளிவந்துவிட்டது!

### குறியீட்டு அளவையியல்

(திருத்திய பதிப்பு)

ஆசிரியர்: வே. யுகபாலசிங்கம் B.A.Hons.

ஐந்தாண்டு வினாக்களுக்கான பயிற்சிகள் உள்ளடங்கியது.

விலை ரூபா 30.00

வெளியீடு:

பட்டப்படிப்புகள் கல்லூரி,

148'1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(B-1740)

## நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### கேள்வி அறிவித்தல் - 1991

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் 1991-ம் ஆண்டு தைமாதம் 1-ம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு, விற்பனைசெய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் 28 12.90 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும், நல்லூர் பிரதேச சபை நிர்வாக அதிகாரியினால், கேள்வி வைப்புப்பணம், பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதன்பேரில் 27-12-90ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் 28 12 90 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக, மூலப்பிரதியை விஷேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனவும், இணைப்பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் எனவும் பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது காரியாலயக் கேள்விப் பெட்டியில் போடலாம். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் ''குத்தகைக்கேள்வி - 1991'' என தவறாது எழுதுதல் வேண்டும். கேள்விப பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டையுடன், முன் அனுபவ அத்தாட்சியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர், கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய கேள்வித் தொகையைச் செலுத்திக் குத்தகையை நடாத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றை மீறுமிடத்து எதுவித நட்டஈடுமின்றி குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும். எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ விஷேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. குத்தகை நிலுவைகள் உள்ளவர்களுக்குக் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. தனியார் காணியில் இறைச்சிக் கடை நடாத்துபவர்கள், காணிச் சொந்தக்காரரிடம் அனுமதிக் கடிதம்பெற்றுச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும், கேள்வி அறிவித்தல் நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் தேவைப்படின், காரியாலய வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | குத்தகையின் தன்மை | கே ப. மீ. பணம் | கே வை. பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி மத்திய சந்தை | 100-00 | 2,500/- | 3,00,000-00 |
| 2. | திரு. சந்தை து.ச.வ.பா. நிலையம் | 50-00 | 500/- | 5,000-00 |
| 3. | ஆடியபாதம் சந்தை (கொக்குவில்) | 50-00 | 1,000/- | 25,000-00 |
| 4. | கொண்டாவில் ஸ்ரேஷனடிச் சந்தை | 25-00 | 100/- | 500-00 |
| 5. | கோண்டாவில் கிழக்கு மீன் சந்தை | 25-00 | 100/- | 500-00 |
| 6. | திரு. சந்தைஆட்டிறை. கடை இல.1 | 50-00 | 1,000/- | 20,000-00 |
| 7 | திரு. சந்தை ஆட்டிறை. கடை இல 2 | 50-00 | 1,000/- | 20,000-00 |
| 8. | மணியந்தோட்டம்மாட்டிறைச்சிக்கடை | 50-00 | 500/- | 4,000-00 |
| 9. | ஆடியபாதம் சந்தை ஆட்டிறை. கடை | 50-00 | 500/- | 10,000-00 |
| 10 | ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 50-00 | 500/- | 10,000-00 |
| 11. | கொக் உபஅலுவலக மாட்டிறைச்சி,, | 50-00 | 500/- | 8,000-00 |
| 12. | கொக்.உபஅலுவலக ஆட்டிறைச்சி ,, | 50-00 | 500/- | 5,000-00 |
| 13. | கோண் ஸ்ரேசனடி சந்தை ,, ,, | 50-00 | 500/- | 3,000 00 |
| 14 | 327 பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 500/- | 8,000-00 |
| 15. | 19 இராமநாதன்வீதிமாட்டிறை ,, | 50-00 | 500/- | 8,000-00 |
| 16. | பொற்பதி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 500/- | 5,000-00 |
| 17. | இணுவில்மஞ்சத்தடி மாட்டிறைச்சி,, | 50-00 | 500/- | 5,000-00 |
| 18. | கோவில்தோட்டம் ஆட்டிறைச்சிக்கடை | 50-00 | 500/- | 2,000-00 |

நல்லூர்ப் பிரதேச சபைப் பணிமனை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
10—12—1990.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
நல்லூர் பிரதேச சபை.

(B/1

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மேஜர் அல்பேட்

செல்வன் கந்தையா ரூபதநிதி (ரூபன்)

வீரத்தாயின் மடியில்: 24-06-1961

வீர மண்ணில்: 21—12—1985

ஐந்தாண்டு காலம் ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பும் நினைவும், எங்கள் மனதைவிட்டு என்றென்றும் மறையாது. ஐந்தாண்டில் நீ விதைத்த போர் விதைகள் நீண்டெழுந்து வேரூன்றி தமிழர் விடுதலையைப் பெற்றெடுக்கும்;

அல்பேட் வீதி,
அச்சுவேலி.

தாய், தந்தை, சகோதரர்கள்.
அண்ணிமார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்;

(R. 933)

## சிந்தனைக்கு

சீரான ஒழுங்கே, சீரானதனைத்துக்கும் அடிப்படை.
— எட்மண்ட் பர்க்


# ஈழநாதம்

31, ஸ்ரீ மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 21-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2703
த.பெ.எண் 05


## காலத்தின் கட்டாயம்; கவனம் தேவை

சைக்கிள் பயணம் இன்று தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. பாடசாலை சிறுவர்/சிறுமியரிலிருந்து பல்கலைக்கழக துணைவேந்தர் வரை, மண்ணெண்ணை வியாபாரியிலிருந்து அரச அதிபர் வரை சகலருக்கும் இன்று சைக்கிளே பிரதான போக்குவரத்துச் சாதனம். சுருக்கமாக கூறின், தமிழரின் பொருளாதார இயக்கத்திற்கும், சமூக நடவடிக்கைகளுக்கும் மிகவும் அத்தியாவசியமானதாக சைக்கிள் உள்ளது.

இந்த நிலையினால், சைக்கிள் விலை பெரியளவில் உயர்ந்துள்ள அதேவேளை சைக்கிள் திருட்டும் பெரியளவில் அதிகரித்துள்ளது. தெருவில் நிறுத்தப்படும் சைக்கிளில் இருந்து வீட்டிற்குள் பாதுகாப்பாக இருக்கும் சைக்கிள் வரை களவாடப்படுகின்றன. ஏனெனில் சைக்கிளுக்கு அவ்வளவு சந்தை வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது.

இவ்வாறாக சைக்கிளின் முக்கியத்துவம் ஒருபுறம் இருக்க சைக்கிள் போக்குவரத்து ஏற்படுத்தும் நெரிசல்களும், விபத்துக்களும் இன்று பெருமளவில் அதிகரித்து உள்ளன. குறிப்பாக சிறுவர்/சிறுமியர், பெண்கள் இந்த விபத்துக்களில் சிக்குகின்றனர்; ஏற்படுத்துகின்றனர்.

இந்த விபத்துக்கள் பெரும்பாலும் பாடசாலை ஆரம்ப நேரங்களிலும், விடும் நேரங்களிலும், காரியாலய ஆரம்ப நேரங்களிலும் விடும் நேரங்களிலும் இடம் பெறுகின்றன. நேற்றுக் காலையும் ஒரு மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள் விபத்தொன்று யாழ் பல்கலைக்கழக சந்தியில் இடம்பெற்றது. பாடசாலை மாணவ மாணவிகள் - மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்தவர்கள் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். சைக்கிள் விபத்தாக இருப்பினும் அது ஒரு கோரமான காட்சி என அதைப் பார்த்தவர்கள் தெரிவித்தார்கள்.

இன்று வீதிகளில் ஓடும் மோட்டோர் வாகனங்களில் பெரும்பாலானவை 'அத்தியாவசியத் தேவைகளுக்கே' பெரும்பாலும் பாவிக்கப்படுகின்றன. அத்தோடு முன்னரே சில வீதிகளில் பலாலி, காங்கேசன்துறை வீதிகள் போன்றவை அத்தியாவசியத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதால் மக்கள் அவ் வீதிகளில் நடமாட்டத்தைக் குறைக்கும்படியும் அதேவேளையில் அவதானமாக நடமாடும்படியும் கோரிக்கையும் விடப்பட்டும் உள்ளது.

இந்த நிலையில், சைக்கிள் பிரயாணிகள் மிகவும் அவதானமாகப் போக்குவரத்துக்களை மேற்கொள்ள வேண்டும். எதிர்பாராமல் ஏற்படுபவைதான் விபத்துக்கள். ஆனால் அவை ஏற்படுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகாது. ஆகையால் சைக்கிள்களில் பிரயாணம் செய்பவர்கள் சமாந்தரமாகச் செல்வதையோ கூட்டமாகக் கதைத்துக்கொண்டு செல்லுதலையோ தவிர்ப்பது அவர்களுக்கும் நல்லது.

அதிலும் சிறுவர் சிறுமியர் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். பொதுவாகவே சிறுவர் சிறுமியர் புதினம் பார்ப்பதில் ஆர்வமுள்ளவர்களாக உள்ளதோடு, சமநிலையற்றவர்களாகவும் இருப்பார்கள். இதன் காரணமாக வீதியில் சைக்கிள்களில் செல்லும்போது வீதியில் அல்லது வீதி ஓரங்களில் நடைபெறும் சம்பவங்களைப் பார்த்துக்கொண்டு செல்வார்கள். இதன் காரணமாக விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன. சிறுவர்களைப் போன்று அநேக பெண்களும் சைக்கிள் பிரயாணத்தின்போது சமநிலை குறைவாக இருப்பதால் விபத்துக்களில் சிக்குகின்றனர்.

சிறுவர் சிறுமியர் விபத்துக்களைப் பொறுத்து பெற்றோரும் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். சிறு பிள்ளைகளுக்கு சைக்கிள் வழங்கும்போது அவர்களை எப்பொழுதும் கவனமாக இருக்கும்படி அறிவுறுத்துவதோடு, தேவையற்ற வேலைகளுக்கு சைக்கிள்களை வழங்காமல் இருப்பது நல்லது. மேலும் பிரதான வீதிகளைத்தவிர்த்து பிரயாணங்களை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்துதல் வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் எங்கும் இன்று வைத்திய சாலைகளில் மருந்தில்லை. குண்டுவீச்சுக்களாலும், போர்முனைகளிலும் காயமடைபவர்களுக்கே மருந்துப் பற்றாக்குறையினால் வைத்திய வசதி செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் விபத்துக்களால் மருந்துத் தேவை மேலும் அதிகரிக்கின்றது. சிலவேளை வைத்திய வசதியின்மையால் துயரமான முடிவுகளும் ஏற்படலாம். ஆகையினால் இதைத் தவிர்ப்பது சகலரதும் கடமையாகும்.

# மாங்குளம் வெற்றி உணர்த்தும் செய்திகள்

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து 119 பேரை மீட்டு எடுத்து இருக்கின்றோம் என்றும், படையினர் வவுனியா முகாமுக்கு வந்து சேர்ந்து உள்ளனர் என்றும், இன்னுமொரு அணியினர் உலங்கு வானூர்திகள் மூலம் மீட்கப்பட்டுள்ளார்கள் என்றெல்லாம் நவம்பர் மாதக் கடைசிப் பகுதியில் செய்திகள் வெளியிடப்படலாயிற்று. இவற்றின் வாயிலாக விடுதலைப் போராட்டத்தில் புதியதொரு அத்தியாயம் மலர்ந்து விட்டது என்பது அனைவருக்கும் புரிய வைக்கப்பட்டது.

அதாவது இதுவரை கால நிகழ்வுகளில் இராணுவம் சுற்றிவளைத்து-தேடி அழிக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பயங்கரவாதம் பூண்டோடு அழிக்கப்படும் என்றவாறான தகவல்கள்தான் வெளியாகுவது வழக்கம். ஆனால் இராணுவத்தினரை தேடி விடுதலைப் புலிகள் வலை விரித்திருக்கிறார்கள் என்றும், புறமுதுகிட்டோடும் இராணுவத்தை மீட்கும் 'சாதனை'யில் அரசாங்கம் முயற்சி எடுக்கிறது என்றும் தகவல்கள் கூறத் தொடங்கின. இதன் மூலம் விடுதலைப் புலிகள் மரபு வழியாக அமைக்கப்பட்ட ஒரு இராணுவ அணியாக மலர்ச்சி கண்டுள்ளார்கள் என்பது துல்லியமாக உணர்த்தப்பட்டது.

ஏக காலத்தில் காரைநகர், ஊர்காவற்றுறை, பலாலி, காங்கேசன்துறை, ஆனையிறவு, முல்லைத்தீவு, வவுனியாப் பகுதிகளிலும் இராணுவம் முன்னோக்கி நகர்வதைத்தடுக்கும் அதேவேளை மாங்குளம் போன்றதொரு பெரிய முகாமை மறியக்கும் வகையில் செயலாற்ற முடிந்திருக்கின்றது; சக்தி படைத்திருக்கின்றது என்பது நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. ஆரம்பத்தில் சிறுமோட்டார் கொண்டு சுமார் 150 பேர் வரையில் கொண்ட புலிகள் குழுவின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவே அரசாங்கம் கூறியது. ஆனால் இரண்டொரு தினங்களுக்குள்ளாக மாங்குள இராணுவ முகாமுடன் தொடர்பை இழந்துவிட்டோம் என்பதை ஏற்றுக்கொண்டது அரசாங்கம்.

மேலும் இதே காலப்பகுதியில் கிழக்கிலும் கொக்கிளாய் முதல் பொத்துவில் வரையான பகுதிகளில் புலிகளை ஒழித்துவிட்டோம் என்ற அரசின் பிரசாரத்தைப் பொய்யாக்கும் வண்ணம் ஏதோவொரு வடிவிலான தாக்குதல் நாளாந்தம் தொடர்கதையாகியது. சுற்றிவளைப்பு, தேடுதல், கைதுகள் அனைத்தையும் மீறி புலிகள் வெற்றிகரமாகச் செயல்படுகின்றனர் என்பதைத் துல்லியமாக வெளிப்படுத்திய நிகழ்வுகளை எதையும் மூடிமறைத்திட அரசாங்கத்தால் இயலவில்லை.

இவை தமிழீழ மண்ணைக் கைப்பற்றுதல் என்பதைவிட கைப்பற்றிய பகுதியைப் பாதுகாப்பது என்பது சிறிலங்கா இராணுவத்திற்கு காரிய சாத்தியமற்றது என்பதைஉணர்த்தியிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

[3]

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது "நாம்இருக்கும் நாடு நமது என உணர்ந்தோம்" என்ற சுப்பிரமணிய பாரதியின் கூற்று மக்களின் உணர்ச்சியைக் கிளறியது. அதேபோல ஈழ போராட்டத்திலும் "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்னும் தொடர்வேகம் சேர்ப்பதாகும். இதை உணர்த்துவது போல எங்களின் சொந்த மண்ணின் எல்லைகளை மீறிப்புகுந்த அந்நியர்கள் விரட்டப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் குறிக்கப்படும்.

ஏனெனில் வவுனிக்குளத்தில் பருவகால மீன் பிடிக்காக வரும் நூற்றுக் கணக்காக; வந்துசேரும் நீர்கொழும்பின் சிங்கள மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதுவே மாங்குளம் இராணுவ முகாம் அமைக்கப்பட்ட தன் பிரதான நோக்கமாக இருந்தது. 1978 ஆம் ஆண்டளவில் ஒரு ஜீப்வண்டியும், இரு ட்றக்குகளும், சுமார் அறுபது இராணுவத்தினரையும் கொண்டு இந்த முகாம் ஸ்தாபிக்கப்பட்டது. மாங்குளத்தில் ஏற்கனவே செயற்பட்டு வந்த பொலிஸ் நிலையம் இந்த மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப் போதாது என்று அரசு கருதியதாலும், பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் முகமாகவும், 1978 இன் ஜூன் மாதப் பகுதியில் இந்த முகாம் அமையலாயிற்று. சுமார் இருவார காலம் மட்டுமே தங்க கட்டடத் திணைக்களத்திடம் அனுமதி பெற்ற இராணுவம் தொடர்ந்து இதுவரை நீடித்தது. கட்டடத் திணைக்களமாக இருந்த கட்டடத் தொகுதி பின்னர் பொது வேலைப் பகுதியாக மாறி பெருந்தெருக்கள் திணைக்களமாக உருமாறிய வேளையில் தான் இராணுவம் அங்கு குடி கொண்டது. பன்னிரண்டு ஆண்டுகளின் முன்னர் நிறுவப்பட்டிருந்த இந்த இராணுவ முகாமில் குடியிருந்த அந்நியர்கள் இன்று விரட்டப்பட்டிருக்கின்றார்கள். எங்களின் சொந்த மண்ணின் எல்லைகளை மீறிவந்த அந்நியர்கள் துரத்தியடிக்கப் பட்டிருக்கின்றனர்.

எங்கள் தேசத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும் படையினரின் முகாம்கள் அனைத்தும் இப்போது படையினருக்கான சிறைக் கூடங்களாகவும், பொறிக்கிடங்குகளாகவுமே இருக்கின்றன என்பதைத் தெளிவு படுத்தியது மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல், இந்தத் தாக்குதலில் வெளிக்கொணரப்பட்ட செய்திகள் அனைத்தையும் அரசாங்கம் துல்லியமாக உணரும் என்றே எதிர்பார்க்கலாம். அதனால் எமது தேசத்தில் விரைவில் ஒரு புது விடியல் பிறக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

### குடிசன மதிப்பு

## நடத்தமுடியாத நிலையில் யாழ்.செயலக அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அடுத்த ஆண்டு குடிசன மதிப்பீடு நடத்தமுடியாத நிலையில் யாழ். செயலக அதிகாரிகள் உள்ளனர்.

அடுத்த ஆண்டுக்கான குடிசன மதிப்பீட்டிற்கான முன் ஏற்பாடுகள் யாவும் இந்த ஆண்டில மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் இதற்குரிய பணிப்புரைகள் எதுவும் யாழ் செயலகத்திற்கு வரவில்லை. இதே நிலை வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல மாவட்டங்களிலும் உள்ளதாகவும் எனவே வடக்கு,கிழக்கு மாகாணங்களிலும் குடிசன மதிப்பீடு நடத்தமுடியாததனால் ஒரு கட்டத்தில் வடக்கு,கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளில் குடிசனமதிப்பீடு நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்ட போதிலும் இந்த முடிவு பின்னர் கைவிடப்பட்டது.

அடுத்த ஆண்டு மேற்படி மதிப்பீட்டை நடத்தமுடியாமல் போகும் சந்தர்ப்பம் இருப்பதாகவும் இதற்கு வடக்கு, கிழக்கின் சீரற்றநிலைமை,மற்றும் இந்தப்பகுதியில் இருந்து பலர் அகதிகளாக வெளியேறியமை போன்ற பல்வேறு காரணங்கள்கூறப்படுகின்றன.

இந்த மதிப்பீடு குறிப்பிட்ட காலத்தில் எடுக்கத்தவறும் பட்சத்தில் மேற்படி மதிப்பீட்டைவைத்து மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டமிடல் நடவடிக்கைகள் நாடுமுழுவதும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வருட பௌதீக விஞ்ஞான மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகள் தற்போது வெளிவந்துள்ளன.

## "போர்க்கால இராகங்கள்"

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு பாடு மீன் கலை மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட "போர்க்கால இராகங்கள்" இசை நிகழ்ச்சி 30.12.90 ஞாயிறு அன்று சாதனா நாடகசாலையில் நடைபெறும் என மேற்படி மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

23.12.90 ஞாயிறு நடைபெறவிருந்த இந்த இசை நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப் பட்டது என்றும் அந்த மன்றத்தினர் தெரிவித்தனர்.

## பறிமுதல்

யாழ்ப்பாணம் - கொழும்பு பகுதிகளுக்கான போக்கு வரத்தை மேற்கொள்ளும் பயணிகள் வவுனியாவில் இராணுவத்தினரால் பல கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயணம் செய்வோர் பலர் பூந்தோட்டம் பகுதி இராணுவத்தினரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும், பல பயணிகளின் அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# சோவியத் வெளியுறவு அமைச்சர் ஷேவர்நாட்சே இராஜினாமா

(மாஸ்கோ)

சோவியத்யூனியனில் வெளியுறவு அமைச்சர் எட்வேர்ட் ஷேவர்நாட்சே தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். சோவியத்யூனியனில் சர்வாதிகாரப் போக்கு தலைதூக்கி வருவதாக அவர் எச்சரிக்கை செய்துள்ளார். சீர்திருத்த வாதிகள் முடமாக்கப்பட்டு சர்வாதிகாரப் போக்கு தலைதூக்கி வருவதாகக் குறிப்பிட்ட அவர் எவரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை.

சோவியத் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்திய உணர்ச்சிவசமான 45 நிமிட உரையில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். 1985 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் வெளியுறவு அமைச்சராக இருந்து வரும் எட்வேர்ட் ஷெவர்நாட்சே பிற்போக்குவாதிகளின் கண்டனங்களுக்கு எதிராக கொர்பச்சேவின் வெளியுறவுக் கொள்கையை ஆதரித்துப் பேச நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். வந்த திரிபோஷா ஒரு வாரத்திற்கே போதும்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்குக் குறைபாட்டைத் தடுப்பதற்கு சுகாதாரத் திணைக்களம் எடுத்த நடவடிக்கையின் பலனாக இருபத்தைந்து தொன் ''திரிபோஷா'' மா யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

இருந்தும் ஒரு வாரத்துக்கே போதுமானது என்று சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் மாதம் தொடக்கம் போஷாக்குக் குறைபாட்டினால் கர்ப்பிணித் தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு நல்லிரத்தக் குறைவு ஏற்பட்டுச் சிகிச்சை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (24)

## முரல் மீன் தாக்கியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

குழுமுரல் தாக்கி படுகாயமடைந்த குருநகரைச் சேர்ந்த அகஸ்ரின் ஜேசுதாசன் (வயது 40) என்ற குடும்பஸ்தர் நேற்று மரணமடைந்தார்.

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றபோதே இவர் முரல் மீன் தாக்கி படுகாயமடைந்தார். என்பது தெரிந்ததே.

(க, 85, 21)




## துயர்துடைப்பிற்கு அரைமாதச் சம்பளம்

(தெல்லிப்பளை)

தென்தமிழீழ மக்களின் துயர்துடைப்பு நிதிக்காக தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தமது அரைமாதச்சம்பளத்தை வழங்கியுள்ளனர்.

இவர்களால் வழங்கப்பட்ட ஒரு லட்சத்து நூற்றி இருபத்தைந்து ரூபாவும் சங்கத்தலைவர் சிவமகாராஜாவால் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

## விரிவுரையாளர் ஒருநாள் சம்பளம்

(நமது நிருபர்)

தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பு நிதிக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்க தீர்மானித்துள்ளனர்.

## உடுபிடவை, நிதி

(நமது நிருபர்)

இன்னலுறும் தென் தமிழீழ மக்களின் துயர் துடைக்க பாடசாலை மட்டத்தில் பெருமதி மிகு உடுபுடைவைகளையும், நிதியையும் பெருமளவில் சேகரித்து வழங்கி யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள் முன் மாதிரி காட்டியுள்ளனர்.

## கைவிடப்பட்ட சைக்கிள்

இருபாலைச் சந்தியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த லுமாலா சைக்கிள் ஒன்று கோப்பாய்பிரதேசவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி இந்தச் சைக்கிளைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேசப் பொறுப்பாளர் திரு. எஸ் பாலன் அறிவித்துள்ளார். (மு)

## தவறிவிட்டது

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் பட்டிமேடு என்னுமிடத்தில் இருந்து பாதிக்கப்பட்டு அகதியாக வந்திருக்கும் வேலுப்பிள்ளை சூரியப்பிரபாகரன் என்பவரது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (மு)

## டேவிட் சுட்டுக்கொலை

சிறிலங்கா இராணுவத்துடன் நெருக்கமாகச் செயற்படும் தமிழீழ விடுதலை இயக்கத்தைச் (ரெலோ) சேர்ந்த டேவிட் என்பவர் அவரது இல்லத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது இல்லத்தில் மனைவியோடும், குடும்ப நண்பர்களோடும் பேசிக்கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆயுதபாணிகள் நடத்திய இந்தத் தாக்குதலில் அவரது மகனும் படுகாயமடைந்துள்ளார்

காங்கேசன்

யோரின் பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு ப. நோ. கூ. சங்கத் தலைவர்களை கூட்டுறவு உதவி ஆணையாளர் பணித்துள்ளார். இந்தத் துறைமுகத்திற்கு கப்பல் வந்ததும் முதலில் 15 லொறிகள் பொருள்களை ஏற்ற அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

பொருள்கள்

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு மேற்படி விடயம் சம்பந்தமாக பேசியபோது இறங்குதுறைப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் நிலையில் பொருள்களை இறக்குவது சாத்தியமற்றது என்று வலியுறுத்தியபோதிலும் கூட்டுப்படைகள் தலைமையகம் இப்பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும்போதே உணவுப் பொருள்களை இறக்குவது மற்றும் துறைமுகத்திற்கான வாகனப்போக்குவரத்து இறங்குதுறைப் பகுதிக்கு செல்பவர்களுக்கான அனுமதிப் பத்திரம் (பாஸ்) வழங்கல் போன்ற செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது

இந்த நிலையில் காங்கேசன் துறைமுகப்பகுதிக்கு கப்பல்கள் வருவதற்கு சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கின்றபோதிலும் இராணுவத்தினர் அப்பகுதியில் நிலைகொண்டிருக்கும்போது துறைமுகத்தில் பொருள்களை எடுத்து வருவது சாத்தியமற்றது என யாழ் செயலக உயர்அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர்.

இதேவேளை பருத்தித்துறையில் இருந்து திருப்பிச் சென்ற இரு கப்பல்களையும் உடன் திருப்பி அனுப்பும்படியும் யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார் (க)

மக்களை

கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது:

1984 ஆம்ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்ட கப்டன் சுந்தரி தமது இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு 1987 ஆம் ஆண்டில் தென்மராட்சிப்பகுதி மகளிர் அணிப் பொறுப்பாளராக பணியாற்றினார். இந்தியப்படையின் ஆக்கிரமிப்பில் எமது மண் இருந்தபோது வன்னிப்பகுதியில் பெண் போராளிகளுடன் இணைந்து இந்தியப்படைக்கெதிராகப் போரிட்டார்.

அதனைத் தொடர்ந்து 1989ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கட்சி பிரகடனப் படுத்தப்பட்டபோது அதன் துணைப் பொதுச் செயலாளராக கப்டன் சுந்தரி நியமிக்கப்பட்டிருந்தார்.

சகோதரர்கள் சகிதம் விடுதலைப் போரில் ஈடுபட்ட பல குடும்பங்களுடன் சுந்தரியின் குடும்பமும் ஒன்றாகும்.

1987ஆம் ஆண்டு மாசி மாதம் 26ஆம் திகதி, கைதடியில் நடந்த வெடி விபத்தில் கப்டன் வாசுவும், 1990ஆம் ஆண்டு ஆவணி மாதம் 9ஆம் திகதி அச்சுவேலியில் விமானத் தாக்குதலில் வீர மரணமடைந்த மேஜர் ஜேம்சும் கப்டன் சுந்தரியின் சகோதரர்களாவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

ஆண் பெண்

வைத்து ஆண், பெண், குழந்தைகள் உட்பட ஐந்து தமிழர்களை சிறிலங்கா இராணுவத்தினர் கோரமாக வெட்டிக் கொலைசெய்து ரயர் போட்டு எரித்துள்ளனர். (மு)

நிவாரணப்

அரிசி ரூபா 13. 15 ஆகவும் 1 கிலோ மா ரூபா 14 25 ஆகவும் 1 கிலோ சீனி ரூபா 25.75 ஆகவும் ஒரு கிலோ பருப்பு ரூபா 48 50 ஆகவும் வழங்கப்படவுள்ளன.

இப்புதிய விலை மாற்றத்தினை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் பின்பற்றுமாறு செயிட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

ப.நோ.கூ.ச. அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் இது வரை வழங்கி வந்த குடும்பத்தினருக்கான உலர் உணவுப் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் முகாம்களில் உள்ளவர்களுக்கு வாராந்த உலர் உணவு மறு அறிவித்தல் வரை தொடர்ந்து வழங்குதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பாகிஸ்தான் சிறிலங்காவிற்கு மருந்துப்பொருள்கள் உதவி

(கொழும்பு)

ஒரு அம்புலன்ஸ் வண்டி உட்பட தொண்ணூறு இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை பாகிஸ்தான் சிறிலங்காவிக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

பாகிஸ்தான் விமானப்படை விமானத்தில் ஏற்றிவரப்பட்டு கொழும்பில் பாகிஸ்தான் தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த மருந்துப்பொருள்கள் நேற்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டன.

இலங்கை வெளிநாட்டமைச்சர் கடந்த ஜூன் மாதம் விடுத்த கோரிக்கையினை ஏற்று இவை அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சல்பீனியா

யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துவருகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள நன்நீர் நீர்நிலைகளில் உள்ள 'சல்பீனியா' போன்ற நீர்த்தாவரங்கள் வளர்வதினால் இதில் யானைக்கால் நோயைப் பரப்பும் நோய்க்காவிகள் வளர்வதால் இவற்றை கட்டுப்படுத்தும்படி பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மாநகரசபை மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

முதல்கட்டமாக யாழ். ஆரியகுளத்தில் வளர்ந்திருக்கும் 'சல்பீனியாவை அகற்றுவதில் மாநகரசபை ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி நீர்த்தாவரங்களை இலகுவாக அழிப்பதற்கு இரசாயனப்பொருள்களைப் பாவிப்பதற்கு தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (க)

இரு புதிய

சாலையில் தமது பாதுகாப்பு வலயத்தில் பூட்டப்பட்டுள்ள மின் விளக்குகளுக்கு ஒளியூட்டுவதற்கு இரண்டு புதிய ஜெனரேட்டர்களை மின்சார சபைக்கு வழங்கி உள்ளது.

(85, (லோ), (க)

நாளை

அத்துடன் விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகை கரும்புலி லெப். கேர்ணல் போர்க்கின் உருவப்பட இணைப்புடன் நாளை வெளிவருகின்றது.

இதில் வன்னிப் பிராந்திய தளபதி பால்ராஜ், மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் ஜெயந்தி ஆகியோரின் செவ்விகளுடனும் மாங்குளமுகாமை வெற்றி கொண்ட விதமும் விபரிக்கப்பட்டுள்ளது. (மு)

ஆட்சியின்

இரண்டாம் ஆண்டு ஆட்சி நிறைவு தினத்தில் உதவிகள் வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மகாபொல 650ரூபாவாக அதிகரிப்பு

(கொழும்பு)

மகாபொல புலமைப் பரிசில்களுக்குரிய பணம் 650 ரூபாவாக அதிகரிக்கும் என வர்த்தகத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்தப் பணம் இதுவரை 500 ரூபாவாக இருந்தது என்றும் அடுத்த வருடம் முதல் 650 ரூபாவாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## இரண்டு பரல் கசிப்புடன் பிடிபட்டார்

(அராலி)

அராலிப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய நபர்ஒருவர்இரண்டு பரல் கசிப்புடன் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டுக் கொண்டார். இவர்மீது அபராதம் விதிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். (20)

ஆனையிறவில்

தொடர்ந்து மாலை 4-30 மணிதொடக்கம் 5மணிவரை சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் இப்பகுதியில் தாக்குதலை மேற்கொண்டன.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் ஆனையிறவு இராணுவ முகாமைநோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இந்த தாக்குதலால் இராணுவ முகாமிற்குள் இருந்த கட்டடம் ஒன்று பலத்த சேதமடைந்தது. (மு)

ஆஸ்பத்திரி

அறிவித்துள்ளது.

சுகாதார சேவைகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே சுகாதார சேவைகள் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுவது குறித்து அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.